**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**அசல் வழக்கு எண்.** 65/2023

**வாக்குமூலம்.பி.வா.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லோகேஸ் | தொழில் | கிராம நிர்வாக அலுவலர், மேற்பனைக்காடு கிராமம். |
| த/பெ. | முருகேசன் | வயது | 26 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 11.11.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் மேற்பனைக்காடு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக 2 வருடங்களாக பணியாற்றுகிறேன். நான் தாவா வழக்கில் அறந்தாங்கி வட்டாட்சியரின் வாய்மொழி உத்தரவின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சாட்சியம் அளிப்பதற்கு முன்பு வழக்கு சொத்தை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். வழக்கு சொத்து வருவாய் ஆவணங்களின் லோகல் பண்ட் ரோடு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வருவாய் கணக்குகளின் அடிப்படையில் மேற்படி ரோடு என்பது எவ்வளவு பரப்பு உள்ளது என்றால் 11 1/2 ஏர்ஸ் பரப்பளவு உள்ளது. மேற்படி 11 1/2 விஸ்தீர்ணமானது சதுர வடிவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி விஸ்தீர்ணமானது பாதை போன்ற அமைப்பில் இல்லை என்றால் சரிதான்.

2. வருவாய் கணக்குகளின் படி மேற்படி லோகல் பண்ட் ரோடு எந்த சாலையில் உடன்னாவது தொடர்ச்சியாக உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்து என்று சொல்லப்படும் சாலையை பயன்படுத்தி தான் வேறு சாலையை சென்று அடையமுடியும் என்ற சூழல் இல்லை என்றால் சரிதான். லோகல் பண்ட் ரோடுக்கு சுற்றிலும் நான்குபுரமும் பட்டா இடங்கள் தான் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி ரோட்டிற்கு நான்கு புரமும் உள்ள புலஎண் மற்றும் பட்டா எண் என்னவென்றால் மேற்படி ரோட்டிற்கு வடபுரம் புலஎண்.151/9A1A, அதன் பட்டா எண்.1227 ஆகும். மேற்படி ரோட்டிற்கு தென்புரம் புலஎண்.151/9B1B ஆகும். அதன் பட்டா எண்.7688 ஆகும். மேற்படி ரோட்டிற்கு கீழ்புரம் புலஎண். 151/9B1Aஆகும்.

அதன் பட்ட எண்.1227 ஆகும். மேற்படி ரோட்டிற்கு மேல்புரம் புலஎண்.150/3A ஆகும். அதன் பட்டா எண்.2101 ஆகும்.

3. மேற்படி ரோடானது அருகில் உள்ள இடத்துடன் சேர்ந்து ஸ்தலத்தில் தனித்தாக்கா இல்லாமல் ஒரே தாக்காக்கதான் இருக்கிறது என்றால் சரிதான். வடபுரமும், கீழ்புரமும் உள்ள இடத்துடன் சேர்ந்து இருக்கிறது. வடபுரத்தில் உள்ள புலஎண்.151/9A1 யார் பெயரில் இருக்கிறது என்றால் ராமசந்திரன் பெயரில் இருக்கிறது. கீழ்புரம் உள்ள புலஎண்.151/9B1A யார் பெயரில் இருக்கிறது என்றால் ராமசந்திரன் பெயரில் இருக்கிறது. நான் ஸ்தலத்தை பார்வையிடும்போது மேற்படி லோகல் பண்ட் ரோடு என்று சொல்லப்படும் இடத்தில் என்ன இருந்தது என்றால் ஓட்டு வீடு, கழிப்பறை, டிராக்டர் கொட்டகை, வைக்கோல் போர் மற்றும் மரம் இருந்தது.

4. மேற்படி ஓட்டு வீடு பழமையானது என்றால் சரிதான். தாவா வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி வாதி என்ன பரிகாரம் கேட்டார் என்றால் அந்த இடம் தனக்கு வேண்டும் என்று கேட்டார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிராம நிர்வாக அலுவலர் விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்து இருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 உத்தரவானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் நீதிப்பேராணை மனு எண்.10174/2016–ன் மனுவில் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் தான் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவின் நீதிப்பேராணை மனு எண்.1074/2016 என்று தவறாக குறிப்பிட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நீதிப்பேராணை மனுவின் பிறப்பிக்கப்பட்ட. 02.07.2016 உத்தரவின் இணையதள பதிவிறக்க நகல் வா.சா.ஆ–9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நீதிபேராணை மனுவில் மனுதாரர் ராமசந்திரன் மேற்படி லோகல் பண்ட் ரோடு காணப்படும் இடம் தன்னுடைய பூர்வீக சொத்து என்றும் செட்டில்மெண்ட் நிலஅளவையின்போது தவறுதலாக பட்டா வழங்கப்படாமல் போய்விட்டது என்று தான் கோரிக்கை வைக்கிறார் என்றால் சரிதான்.

5. ராமசந்திரன் மேற்படி நீதிப்பேராணை மனுவில் தனக்கு இடம் இல்லை என்றும் தனது இலவச நிலஒப்படைவு செய்யப்படவேண்டும் என்று கோரிக்கை வைக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–1 ஆவணத்தில் வருவாய் கோட்டாட்சியர் ராமசந்திரனுக்கு வேறு இடங்கள் இருப்பதால் நிலஒப்படை செய்யமுடியாது என்று தான் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உத்தரவை எதிர்த்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் ராமசந்திரன் மேல்முறையீடு தாக்கல் செய்து அதன் பெயரில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தான் மீண்டும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் உத்தரவு பெற்றார் என்றால் சரிதான். மேற்படி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை மனு எண். 18412/2018 மனுவில் 24.08.2018ஆம் தேதி உத்தரவின் இணையதள பதிவிறக்க நகலானது வா.சா.ஆ–10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் வழிக்காட்டுதலின் அடிப்படையில்

தான் வா.சா.ஆ–2 படி மாவட்ட வருவாய் அலுவலகர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் அந்த உத்தரவில் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

6. அந்த மேல்முறையீட்டில் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் மனுதாரரின் கோரிக்கை என்னவென்று தெரியாமலும் உயர்நீதிமன்ற உத்தரவை பரிசீலிக்காமலும் முன்னால் கோட்டாட்சியரின் நடவடிக்கையை பரிசீலிக்காமலும் முன்னால் வட்டாட்சியரின் அறிக்கையினை பரிசீலனை செய்யாமலும் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று மேல்முறையீடு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த உத்தரவில் 1426 பசலி அடங்கலில் ராமசந்திரன் ஓட்டு வீடு என்று 6வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அலுவலர் தனது உத்தரவில் நிலஉடைமை மேம்பாட்டுத்திட்ட அளவைக்கு முன்பே லோகல் பண்ட் ரோடு என்று வகைப்பாடு செய்யப்பட்டு உள்ளதால் நிலவுடைமை மேம்பாட்டுத் திட்ட அளவையில் ஏற்பட்ட தவறு என்று எடுத்துக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் சரிதான். செட்டில்மெண்ட் காலத்தில் இருந்தே லோகல் பண்ட் ரோடு என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதால் நிலவுடைமை மேம்பாட்டுத்திட்டத்தில் ஏற்பட்ட தவறு என்று கருதமுடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

7. வாதியின் கோரிக்கை செட்டில்மெண்ட் காலத்திலேயே தவறாக லோகல் பண்ட் ரோடு என்று குறிப்பிடப்பட்டு இருப்பதால் தான் அதை வகைமாற்றம் செய்யக்கோருகிறார் என்றால் அவர் பட்டா தவறுதலாக இருக்கிறது தனக்கு பட்டா மாற்றம் வேண்டும் எ ன்று கேட்கிறார். வாதி நிலவுடைமை மேம்பாட்டுத்திட்டத்தில் தவறுதலாக பதிவு ஏற்பட்டுவிட்டது என்றும் தனக்கு பட்டா கொடுங்கள் என்று கேட்கவில்லை என்றால் பொதுவான கோரிக்கை தான் வைத்து இருக்கிறார். யூ.டி.ஆர் அளவை தவறு என்று கோரிக்கை வைக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 உத்தரவுகள் இரண்டுமே வாதியின் கோரிக்கை பரிசீலிக்காமல் அதிகாரிகள் தவறுதலாக உத்தரவு பிறப்பித்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

8. செட்டில்மெண்ட் காலத்திலேயே வழக்கு சொத்து லோகல் பண்ட் ரோடு என்று வகைப்பாடு செய்யப்பட்ட பிறகு வாதி தஞ்சாவூர் நிலவரி திட்ட அலுவலரிடம் ஓ.மு.6291/அ.2–ன் படி மனு கொடுத்ததற்கு அவர்கள் தஞ்சாவூர் துணை நிலவரித்திட்ட அலுவலரிடம் மனு கொடுக்க சொல்லிவிட்டார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தஞ்சாவூர் துணை நிலவரி திட்ட அலுவலர் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுக்க சொல்லி 13.11.2000ஆம் தேதியில் உத்தரவிட்டார் என்றால் அதுப்பற்றி தெரியாது. அதன் அடிப்படையில் 3ஆம் பிரதிவாதி வருவாய் கோட்டாட்சியரிடம் வழக்கு சொத்தை தீர்வை தரிசாக மாற்ற மனு கொடுத்து வாதி நடவடிக்கை எடுத்தார் என்றால் அதுப்பற்றி தெரியாது.

9. அதன்படி வருவாய் கோட்டாட்சியர் ஓ.மு.1089/2005 நாள்.23.02.2005 படி 4ஆம் பிரதிவாதி வட்டாட்சியருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது என்றால் அதுப்பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–9 நீதிப்பேராணை மனு

உத்தரவில் மேற்படி கோப்புகள் பற்றி 4வது பக்கத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது கோப்புகளை பார்த்தால் தான் சொல்லமுடியும்.

10. மேற்படி கோப்பின் அடிப்படையில் 4ஆம் பிரதிவாதி வட்டாட்சியர் 27.06.2005ஆம் தேதி இடப்பார்வை செய்து 3ஆம் பிரதிவாதிக்கு அறிக்கை அனுப்பி இருக்கிறார் என்றால் கோப்புகளை பார்த்தால் தான் என்னால் சொல்லமுடியும். அந்த கோப்பின் வழக்கு சொத்து லோகல் பண்ட் ரோடு என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது சரியல்ல என்றும் வாதிக்கு பட்டா வழங்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கோப்புகளை பார்த்தால் தான் சொல்லமுடியும். ஓ.மு.1089/2005 என்ற கோப்பு கோட்டாட்சியரால் வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்டது என்றாலும் அது தொடர்பான நடவடிக்கைகள் கோட்டாட்சியர் அலுவலகத்திலும் வட்டாட்சியர் அலுவலகத்திலும் தான் இருக்கும் என்றால் கோப்புகளை பார்த்தால் தான் சொல்லமுடியும்.

11. மேற்படி விசாரணைக்கு முரணாக 3ஆம் பிரதிவாதி வா.சா.ஆ.1–ல் கண்ட உத்தரவு பிறப்பித்துள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானத என்பதை பொறுத்து 3ஆம் நபர்கள் யாரும் இதுவரை எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றால் அதுப்பற்றி தெரியாது. வழக்கு சொத்தில் வாதியின் அனுபவம் நிலவியல் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் வாதிக்கு சொந்தமானது என்று உரிமை விளம்பல் செய்வதில் அரசு அலுவலர்களுக்கு ஆட்சேபணை இருக்காது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணையில்லை.**